## அரச கருமமொழி ஆணைக்குழு

### 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களைத் தவிர்த்து 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரச கருமமொழி ஆணைக்குழுவின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 கணக்கீட்டு நியமங்கள்

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம்

I. நிதிக்கூற்றுக்களுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பட்டோலைகளில் தரவுரீதியான தகவல்கள் ஒப்பிடப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

II. நிதிக்கூற்றுக்களுடன் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 10 இன் பிரகாரம் முன்னைய ஆண்டில் சொத்துக்களை விற்றுத் தீர்த்தல் சரியாக கணக்குவைக்கப்படாததன் பேரில் திரண்ட நிதியத்தினை ரூபா 41,100 ஆல் குறைத்துக் காட்டுதல் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் பிரகாரம் ஊழியர் ஓய்வூதிய நலன்கள் தொடர்பான கணக்கீட்டுக் கொள்கை நிதிக்கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 18 இன் பிரகாரம்

I. ரூபா 2,174,888 கிரயமுள்ள முழுமையாகப் பெறுமானத்தேய்விடப்பட்டு பெறுமதி பூச்சியமாக உள்ள எனினும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற இயந்திரங்களும் உபகரணங்களும் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

II. நியமத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட சொத்தக்கள் விகிதாசார அடிப்படையில் பெறுமானத்தேய்வு செய்யப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நிறுவனத்தின் பெறுமானத்தேய்வுக் கொள்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றிற்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) அரசாங்க நிதிப்பிரமாணம் | |
| (i) நி.பி 392(இ) | செல்லுபடியற்றதாக்கப்பட்ட ரூபா 19,042 பெறுமதியான காசோலை ஒன்று தொடர்பாக புதிய காசோலை ஒன்றினை வழங்கும் போது இந்த நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் ஏடுகளில் உரிய பதிவுகள் செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நி.பி 1646 | நிறுவனத்திற்குச் சொந்தமான இரண்டு வாகனங்களின் பிரயாணம் தொடர்பான மாதாந்தப் பொழிப்பின் முதல் பிரதியுடன் அந்த மாதத்தின் நாளாந்த ஓட்ட அட்டவணைகளும் நிறுவனத் தலைவரின் மூலம் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் |

| | |
|---|---|
| | தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) சுற்றறிக்கை

| | | |
|---|---|---|
| I. | 2004 ஆகஸ்ட் 31 ஆந் திகதிய 353(5) ஆம் இலக்க அரசாங்க நிதிசுற்றுநிருபம் | சிக்கனத்தன்மையற்ற வான்களை விற்றுத்தீர்ப்பதற்கு சுற்றுநிருபத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| II. | 2008 மே 28 ஆந் திகதிய 428 ஆம் இலக்க அரசாங்க நிதிசுற்றுநிருபம் | சுற்றுநிருபத்திற்கு முரணாக ஒரு சந்தாப்பத்தில் ரூபா 1000 இற்கு மிகையாகவும் 13 சந்தர்ப்பங்களில் ரூபா 23,997 கூட்டுமொத்த தொகையும் சில்லறைக் காசிலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. |
| III. | 1990 ஒக்டோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றுநிருபம் | 06 மாதங்களுக்கு ஒரு தடவை வாகனங்களின் எரிபொருள் நுகர்வும் வாகன ஓட்டங்களின் மாதாந்த பொழிப்பு அறிக்கைகளும் சம்பவக்குறிப்பு புத்தகங்களில் பதியப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கு ஆணைக்குழுவின் செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகள் ரூபா 1,359,452 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 1,556,368 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் நிதிசார் விளைவுகள் ரூபா 196,916 ஆல் குறைவடைந்ததற்கு பிரதானமாக மீண்டுவரும் செலவுகளுக்காக திறைசேரியிடமிருந்து கட்டுநிதிப் பெறுவனவுகள் ரூபா 500,000 இனாலும் நானாவித வருமானம் ரூபா 15,993 இனாலும் குறைவடைந்தமையும் மற்றும் பிரயாணச் செலவுகள்

ரூபா 55,946 வழங்கல் செலவுகள் ரூபா 316,160 இனாலும் பொதுப் பாவணை மற்றும் ஏனைய சேவைச் செலவுகள் ரூபா 168,790 இனாலும் அரசகரும மொழிக் கொள்கையினை அமுல்படுத்துவதற்கான செலவுகள் ரூபா 78,475 இனாலும் பெறுமானத்தேய்வு ரூபா 21,481 இனாலும் அதிகரித்தமையும் தாக்கமளித்திருந்தன.

## 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

### (அ) வருமானம் குறைவடைதல்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறைவடைந்திருந்தது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| | 2011 | 2010 | வேறுபாடு | |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | சதவீதம் |
| மீண்டுவரும் செலவுகளுக்காக திறைசேரியிடமிருந்து கட்டுநிதி பெறுதல் | 11,450,000 | 11,950,000 | (500,000) | (4.18) |
| நானாவித வருமானங்கள் | 27,838 | 43,830 | (15,992) | (36.49) |
| புத்தகம் அச்சிடலுக்கான நன்கொடை | - | 456,500 | - | (100.00) |
| ஏனைய வருமானங்கள் | - | 5,243 | - | (100.00) |

### (ஆ) செலவுகளின் அதிகரிப்பு

மீளாய்வாண்டிற்கான செலவுகளில் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 5% இற்கும் 178% இற்கும் இடைப்பட்ட அதிகரிப்பு காணப்பட்டது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| | 2011 | 2010 | வேறுபாடு | % |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | |
| ஊழியர் பணிக்கொடை | 5,831,323 | 7,071,973 | (1,240,650) | (17.54) |
| பிரயாணச் செலவுகள் | 87,374 | 31,428 | 55,946 | 178.01 |
| வழங்கல்கள் | 1,114,255 | 798,095 | 316,160 | 39.61 |
| சொத்துக்களை புதுப்பித்தலும் பராமரிப்பும் | 329,,226 | 492,953 | (163,727) | (39.61) |
| பொதுப்பாவனை மற்றும் ஏனைய சேவைகள் | 788,926 | 620,136 | 168,790 | 27.22 |
| அரசாங்க மொழிக் கொள்கையினை அமுல்படுத்துதல் | 1,755,812 | 1,677,338 | 78,474 | 4.68 |
| பெறுமானத்தேய்வு | 151,841 | 130,360 | 21,481 | 16.48 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

(i) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயலாற்றல் அறிக்கையினைப் பரிசோதனை செய்த போது பின்வரும் இலக்குகள் அடைந்து கொள்ளப்படாமை அவதானிக்கப்பட்டது.

| நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | ஏற்பாடு | திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங் களின் எண்ணிக்கை | நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங் களின் எண்ணிக்கை | அடைந்து கொள்ளப்படாமை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| அரசாங்க ஊழியர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் | 600,000 | 12 | 07 | (05) |
| பரிசீலினை மற்றும் மீளாய்வு நிகழ்ச்சித்திட்டங்கள் | 600,000 | 04 | 01 | (03) |
| சங்வாத வெகி எனும் | 800,000 | 02 | - | (02) |

| | | | | |
|---|---|---|---|---|
| கையேட்டினைத் தயாரித்து அச்சிடல் | | | | |
| பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் | 500,000 | 04 | 02 | (02) |

(ii) வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் முறைப்பாடுகளை விசாரணை செய்தல் மற்றும் அரசாங்க நிறுவனங்களின் மூலம் வெளியிடப்படுகின்ற அறிவித்தல்கள் அரசாங்க கொள்கைகளுக்கு இணங்கியுள்ளதா என்பதனைப் பார்த்தல் ஆகிய இரண்டு நிகழ்ச்சித்திட்டங்கள் விபரமாகக் காட்டப்படாததன் காரணமாக அந்த நிகழ்ச்சித்திட்டங்களின் செயலாற்றலினைப் பரிசோதனை செய்ய முடியாதிருந்தது.

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

அரசாங்க நிறுவனங்களில் காணப்படுகின்ற இணையதளங்களை மீள்நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் கீழ் ஆணைக்குழுவின் இணைய தளத்தினை மீள் நிர்மாணிக்கும் நடவடிக்கை இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மையினால் இலவசமாகச் செய்துகொள்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தும் அதற்குத் தேவையான தகவல்களை ஆணைக்குழுவினால் விரைவாகப் பெற்றுக்கொள்ளாமையின் காரணமாக அச்சந்தர்ப்பம் தவிர்க்கப்பட்டிருந்தது.

**3.3 தாமதமடைந்த செயற்திட்டம்**

சங்வாத வெகி எனும் கையேட்டினைத் தயாரிக்கும் குழுக்கூட்டங்கள் தொடர்பாக 2004 ஆம் ஆண்டிலிருந்து 2007 ஆம் ஆண்டுவரை ரூபா 322,514 கூட்டுமொத்த தொகை செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2012 ஏப்ரல் 18 ஆந் திகதி வரையும் ஒரு கையேடு மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

**3.4 ஆளணி நிர்வாகம்**

அங்கீகரிக்கப்பட்ட 28 பதவிகளில் 13 பதவிகள் 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் அப்பதவிகளுக்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. பதவியணியினரின் விபரம் பின்வருமாறு இருந்தது.

| | பதவி | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினரின் எண்ணிக்கை | வெற்றிடமாக உள்ள பதவியணியினர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | நிறைவேற்றுனர் | 01 | - | 01 |
| 2. | நிறைவேற்றுனர் அல்லாதவர்கள் | 20 | 10 | 10 |
| 3. | ஏனையவர்கள் | 07 | 05 | 02 |
| | | 28 | 15 | 13 |

## 4. கணக்களி தன்மையும் நல்ஆளுகையும்

### 4.1 செயல் நடவடிக்கைத் திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 5.1.2 ஆம் பிரிவின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டத்தினைத் தயாரிக்கும் போது குறிக்கோள்களையும் இலக்குகளையும் திட்டமிடப்பட்ட காலத்திற்குள் அடைந்து கொள்வது தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்பு வெளிப்படையாகக் காட்டப்பட்டிருக்கவில்லை.

### 4.3 உள்ளகக் கணக்காய்வு

அமைச்சின உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. 2011 ஆம் ஆண்டிற்காக உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

1999 நவம்பர் 19 ஆந் திகதிய பீஎப்/பீஈ3 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றுநிருபத்தின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு தோற்றுவிக்கப்படுவதற்கும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான பலவீனங்கள் அவ்வப்போது அரசகரும மொழி ஆணைக்குழுவின் தலைவரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பில் விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) உள்ளகக் கட்டுப்பாடு
(ஆ) கணக்கீடு
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) செயலாற்றல்
(உ) நிதிக் கட்டுப்பாடு